புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# குமரி வட்டார நாவல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்கள்

*ஆய்வாளர்*
***ச.வ.சஜி ரேகா,***
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*
*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்.*

*நெறியாளர்*
***முனைவர் சு. இளமாறன்,*** *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்.*
*(இணைப்பு: மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,*
*அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி – 627 012) தமிழ்நாடு.*

## முன்னுரை

பன்னெடுங்காலமாக ஆணாதிக்கத்தின் அடக்குதல்களுக்கும் ஒடுக்குதல்களுக்கும் உள்ளான பெண்களின் உணர்வுகள் கடந்த நூற்றாண்டின் இறுதி முதல் தடைகளைத் தகர்த்தெறிந்து விட்டு வெளிப்படலாயின. இதில் பெண்களைப் பற்றி ஆண்கள் எழுதிக் கொண்டிருந்த நிலைமாறி பெண்களைப் பற்றி பெண்களே எழுதும் போக்கு நிலை கொள்ளத் தொடங்கியது மிக முக்கியமான ஒன்றாகும். அதிலும் குறிப்பாகப் பெண்கள் தங்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றியும் தங்களின் அமிழ்த்தப்பட்ட உணர்வுகள் குறித்தும் அவர்களின் மொழியிலேயே எழுதுவது, ஆண்கள் எழுதிய எழுத்துக்களை விடவும் இன்னும் நெருக்கமாக, நேரிடையாக விளங்கின. பெண்ணிய எழுத்துக்கள் என்ற பொது அடையாளத்திற்குள் வரும் இவை இந்நூற்றாண்டில் புதிய அடையாளங்களையும் புதிய எழுச்சிகளையும் கொண்டு அமைந்தன. இவற்றில் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு விதத்தில் பெண்களின் ஒடுக்கப்பட்ட நிலையையும் புறக்கணிப்பின் வலியையும் பேசுபவையாக உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்ணிய இலக்கியம் என்ற வகைமைக்குள் வரும் இந்தப் படைப்பூக்கச் செயல்பாடு மிக முக்கியமானது. இதில் ஆர்வமுடன் ஈடுபட்டு வரும் பெண்ணிய எழுத்தாளர்கள் வட்டாரத்திற்கு வட்டாரம் சிற்சில வேறுபாடுகளுடன் தங்களின் தனித்துவ அடையாளங்களைப் பிரதிபலித்து எழுதி வருகின்றனர். அதில் குமரி மாவட்டம் மிக முக்கியமானது. தமிழின் மிக முக்கியமான புனைவெழுத்தாளர்களும், புனைவுகளும் இங்கிருந்து உருவாகியிருக்கின்றனர். குறிப்பாகப் பெண் எழுத்தாளர்களில் பெயர் பெற்று

*விளங்கும் ஒரு வரிசை இங்குண்டு. அழகிய நாயகிம்மாள், ஹெப்ஸிபா ஜேசுதாசன், மலர்வதி ஆகியோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இங்குள்ள வட்டார அடையாளங்களை ஏற்று இங்கு வாழ்கின்ற இடைநிலைச் சாதிப் பெண்கள் உள்ளூர ஆழமாக உணர்ந்த வலிகளையும் புறக்கணிப்புகளையும் சுரண்டல்களையும் பட்டவர்த்தனமாக வெளிக்காட்டிய பெண் படைப்பாளிகளாவர். எளிய சொற்களின் வழியாக பாவனைகள் ஏதுமின்றி, சமூகம் தனக்கெதிராகக் கட்டமைத்திருக்கின்ற கட்டுக்களையும் ஆணாதிக்கச் செயற்பாடுகளையும் படைப்புகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். கொந்தளிப்பான இவ்வெளிப்பாடுகளை அவர்களின் படைப்புகள் வழியாக இக்கட்டுரையில் ஆராயலாம்.*

*அழகிய நாயகிம்மாளின் கவலை, ஹெப்ஸிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு, மலர்மதியின் தூப்புக்காரி இம்மூன்று நாவல்களையும் இணைக்கும் ஒரு புள்ளியாக இருப்பது. நடுத்தர வர்க்கத்துப் பெண்களின் இயலாமையையும் சாதாரண வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் அதிகார மையமும் தான். இந்த அதிகார மையத்தைக் கேள்வி கேட்க முடியாமல் அதன் கோரப்பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டு விடுவிக்கத் தெரியாமல் வாழ்கின்ற பெண்களின் அந்தரங்கக் குரல்கள் இந்நாவல்களில் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியின் வரலாறாகத் தொடங்கி, அன்றைய நிலவுடைமைச் சமூகத்தின் சுரண்டல் வரலாற்றையும் ஆணாதிக்க அடக்குமுறைகளையும், எளிய குடும்பத்தின் குல வரலாற்றையும் ஆணாதிக்க அடக்குமுறைகளையும், எளிய குடும்பத்தின் குல வரலாற்றையும் குடும்ப வரலாற்றையும் இம்மூன்று நாவல்களுமே பேசுபொருளாக முன் வைக்கின்றன.*

*“புதிய களத்தையும், புதிய வாழ்க்கை முறையையும் அறிமுகப்படுத்துவதினால் மட்டும் ஒரு நாவல் முக்கியத்துவம் பெற்று விடுவதில்லை. ஒரு படைப்பைப் பொறுத்தவரை உண்மையில் இவை இரண்டாம் பட்சமானவைதான். ஒரு படைப்பின் அடிப்படையான வெற்றி அது; வாழ்க்கையை அணுகும் முறையிலும் அதுகாட்டும் வாழ்க்கைத் தரிசனத்திலும் தங்கியுள்ளது” என்கிறார் நாவலாசிரியர் பொன்னீலன் (2001:154) பழைய சமூக மதிப்புகளில் ஊறிப்போனவர்களின் வாழ்க்கை முறைகளையும் அதன்வழியாக புதிய களத்தையும் அறிமுகப்படுத்தும் இம்மூன்று நாவல்களும் இத்தோடு மட்டும் நின்றிடவில்லை. அவ்வாறு மட்டும் நின்றிருந்தால் கட்டமைக்கப்பட்ட போலியான மிகு உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வாசகர்களின் கவனத்தைப் பெற்றுவிடும் சராசரியான வணிகப் படைப்புகளாகிவிட்டிருக்கும். மாறாகப், பெண்ணின் பார்வை வழியாக மறுக்கப்பட்ட சுதந்திரத்தையும், அகமுரண்களையும், நிராசைகளையும் மாறிவரும் சமூக மதிப்புகளை ஏற்றுக் கொள்ளத் திராணியற்ற நிலையையும் வாழ்க்கையை அணுகிப் பெற்ற தரிசனங்களாக முன் வைக்கின்றன. இதனால்தான் இம்மூன்று நாவல்களும் முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன. மட்டுமின்றி மூன்று நாவல்களிலும் பெண்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வே மையப்படுத்தப்பட்டுள்ளன.*

*இதன் வழியாக சமூகப் பொருளாதார அடக்குமுறைகளுடன் யதார்த்தவாதக் கலைப்படைப்பாக இந்நாவல்கள் அமைந்துவிட்டிருக்கின்றன.*

**திருமணம் எனும் மூடுதிரை**

*குமரி மாவட்டத்தில் மிகச் சமீபகாலம் வரையில் ஆணாதிக்க மேலாண்மை, குடும்ப அமைப்பிலும் சமூக அமைப்பிலும் வல்லாதிக்கம் செலுத்தும் நிலைகளை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. அதன் மையம் பெண்களின் ஆளுமை சிதைக்கப்படுவதுடன் அவர்களுக்கான தனியடையாளங்களையும் உரிமைகளையும் மறுக்கும் புள்ளியில் இணைகின்றன. அதிலும் குறிப்பாக இங்குப் பெரும்பான்மைச் சமூகமாக வாழும் நாடார் இன மக்களின் குடும்ப வாழ்வில், பெண்களுக்குத் திருமண ஒப்பந்தம் என்பது பெற்றோர்களால், குறிப்பாகத் தந்தையால் வலிந்து திணிக்கப்படும் ஒரு மரபு சார்ந்த நடைமுறையாகவே இருந்திருக்கின்றன. சமூக அந்தஸ்தும் பொருளாதாரமும் திருமண ஒப்பந்தத்தை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன. பெண்களின் உணர்வுகளுக்கு இடமளிக்காமல் பழமை நம்பிக்கைகளிலும் சுயகௌரவ நிலைப்பாடுகளிலும் மணவாழ்க்கை முடிவு செய்யப்படுகின்றன. இந்நிலையை மூன்று நாவல்களுமே பதிவு செய்கின்றன. அழகிய நாயகியம்மாளின் தன் வரலாறாக விரியும் கவலை நாவலில், திருமணம் குறித்த பெண்ணின் அகமன உணர்வுகள் பதிவாகியுள்ளன. வள்ளியாவௌ நாடான் தன் மகளை மணமுடித்து வைக்க எண்ணாமல் தள்ளிவிடும் மனநிலையில் இருப்பதை நாவல் அழகாகப் பதிவு செய்கிறது.*

*“மாத்து குறைந்த பழைய உருப்படியான ஒரு சங்கிலி அட்டியலும் அதோடு சேர்ந்த சுட்டியும் காலில் போட இரண்டு கொலுசு பன்னிரெண்டு ரூபாய்...*

*விலை கொடுக்கும் மாட்டுக்கு கயிறு மாற்றிக் கொடுக்கப்போடும் பூட்டாங்கயிறு போல, இந்த அட்டியலை அவரே என் கழுத்தில் பூட்டினார். கொலுசை சித்தி கையில் கொடுத்து என் காலில் போடச் சொன்னார். விலங்கு போடுவது போல என் காலில் போட்டார்கள்... பிறந்த இடம்விட்டு யாரும் துணையில்லாத அனாதையாய், புகுந்த இடமாகிய பொட்டலூரிலுள்ள அடப்பு வினையில் வந்து சேர்ந்தேன்” (கவலை, பக்.183, 185)*

*நாவலின் பல பகுதிகளிலும் திருமணம் குறித்து எதிர்மறையாகவே பதிவு செய்கிறார் அழகிய நாயகியம்மாள். இது அன்றைய சமூகநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பெண்களுக்கான உரிமைகளும் மறுக்கப்பட்ட சுதந்திரமும் அன்றைய நிலவுடைமைச் சமூக வாழ்வும் திருமணம் என்ற சமூகச் செயல்பாட்டை வெறும் சடங்காகக் கருதும் நிலையை ஹெப்ஸிபா ஜேசுதாஸனும் தன் நாவலில் காட்டுகிறார். லிஸியினை பெண் கேட்டுச் சென்ற தங்கராஜ், அவளை அவள் வீட்டார் ‘சமூக்கட்டு’ எனும் பிடிக்குள் வைத்திருந்ததை,*

*“இது எந்த நூற்றாண்டு என்று நினைத்திருக்கிறார்கள் ஆமாம். அன்னிய வீட்டுப்பிள்ளையான அவனையே இந்தப் பாடுபடுத்தி வைக்கிறவர்கள், தங்கள் வீட்டுப்*

*பெண்ணை என்ன செய்து வைக்க மாட்டார்கள்? அந்தப் பெண்ணின் நிலைமையை அவன் எண்ணிய போது அவன் நெஞ்சம் நெகிழ்த்து. அவள் அவனிடம் பேசினதை யாராவது அறிந்துவிட்டால்... இனிமேல் அவள் யார், அவன் யார்? இனி அதிகக் காலதாமதம் செய்யாமல் அவளை எவன் கையிலாவது பிடித்துக் கொடுத்து விடுவார்கள்" (புத்தம் வீடு, ப.122).*

என்று பதிவு செய்கிறார். பெண் இளமைக் காலம் முதல் சந்திக்கும் பிரச்சனைகள் வாழ்வின் கடைசி வரை நிலைப்பதற்குக் காரணமாகத் திருமணம் அமைந்து வாடுவதை இவ்விரு நாவல்களுமே பேசுகின்றன. அன்றைய சமுதாயச் சட்டங்களும் பெண் குறித்த புரிதல்களும் ஒரு திறந்தவெளிச் சிறைக்குள் பெண்ணை வைத்திருந்ததை இந்நாவல்களில் காண முடிகிறது.

**குடும்பத் தளத்தில் பெண்**

"தாயை மையமாகக் கொண்ட குடும்பம் உருவாகி ஏறத்தாழ 8000 ஆண்டுகளுக்குப் பிறகு தந்தை என்ற உறவு உருவானது" என்கிறார் க. பஞ்சாங்கம் (1994 : 50) இந்தத் தந்தைவழிச் சமூகஅமைப்பில் அதிகாரம் ஆண் வழியிலேயே அமைகின்றது. இதனால் பெண்கள் மீது ஆண்களுக்குப் பாலியல் உரிமை இயல்பாகவே ஏற்பட்டு விடுவதாக ஒரு எண்ணம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குடும்ப அமைப்பில் பெண்களின் இடம் மறுக்கப்பட்ட நிலையிலே இருக்கிறது. வழிவழியாக உருவாக்கப்பட்ட சமூக சட்டதிட்டங்களையும் மரபுகளையும் சரியென ஒப்புக்கொண்டு அவற்றைக் கடைபிடிக்கத் தன்னை ஒப்புக்கொடுத்துவிடும் மனநிலைக்குத் தள்ளப்பட்ட பெண் பாத்திரங்களை இம்மூன்று நாவல்களிலுமே காண முடிகிறது.

குமரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் ஒரு சமூகத்தின் மரபுகளுக்குள் தேங்கிவிட்ட 'பெரியவர்கள்' காட்டும் பிற்போக்குத்தனம் பெண்களின் வாழ்க்கையில் நேரடியாகவே ஆதிக்கம் செலுத்துகின்றது. அந்தஸ்து, சுய கௌரவத்திற்காக எந்த எல்லைக்கும் சென்றுவிடத் துணியும் ஆண்களின் மையமாக விளங்கும் குடும்பம் என்ற தளத்தில் பெண்களின் இடம் கேள்விக்குள்ளாகப்படுவதில் வியப்பேதுமில்லை. தூப்புக்காரி நாவலில் குடும்பச்சூழலின் காரணமாகத் தாயின் தொழிலை ஏற்கும் மகளின் மனநிலை இதனை மிக இயல்பாக வெளிக்காட்டுகின்றது.

"என்ன பெண்ணு நீ, அழுக்கு வாரியதில இருக்கிய வேதன ஒனக்கு தெரியாது, நானாவது அந்த சாதியில பொறந்து அதே தொழிலுண்ணு ஆயிட்டேன். ஆனா ஒன்கொம்ம வாழ்க்கையோட கஷ்டத்துனால தூத்து வாரண்ணு வந்துட்டா, அது அவளோட முடிச்சிக்கப் பாக்கணும். இது குத்தமான தொழிலுக்கு இல்ல. ஆனா மதிப்பில்லா தொழிலா ஆக்கிட்டாங்க. நீ வீட்டுக்கு போ புள்ள..." (தூப்புக்காரி, ப.49) என்று தூப்புக்காரியான தாயின் தொழிலைச் செய்துவிடத் துணிந்த பூவரசியின் கோலம், குடும்பத்தளத்தில் அவளின் நிலையினைக் காட்டும். ஆண்களின் பொறுப்பற்ற தன்மையும், குடியும், பொருட்படுத்தப்பட்ட குற்றங்களாக இந்நாவல்களில் எங்குமே

பதிவாகவில்லை. எளிதில் கடந்துவிடத்தக்கதாகவும், மேலோட்டமான கண்டிப்புகளோடும் ஆண்கள் செய்யும் குற்றங்கள் கவனப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் குடும்பம் என்ற சமூகக் கட்டமைப்பில் அவர்களின் இடம் வலுப்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. மாறாகப் பெண்களின் நிலை சொல்லி மாளாது எனும் அளவிற்கு மூன்று நாவல்களிலும் கூறப்பட்டுள்ளன. புத்தகம் வாசிக்கக் கூட யாருமற்ற நிலையில் சூழல் வாய்க்க வேண்டும் என்ற நிலையைக் ‘கவலை’ நாவல் காட்டுகிறது. “ஒரு நாள் முத்துபபட்டன் கதை படித்துக் கொண்டிருக்கும் போது எங்கள் தகப்பனார் திடீரென்று வந்துவிட்டார்கள். ‘அது என்ன புஸ்தகம்மா’ என்றதும் ‘முத்துப்பட்டன் கதை’ என்றேன். என்னைச் சீறிப் பார்த்தார். நான் வெளியே போய்விட்டேன்” (கவலை, ப.122).புத்தக வாசிப்பையே பெண்களுக்கு மறுக்கும் நிலை அன்றைய குடும்பச் சூழலுக்குள் பெண்களின் இடத்தைக் காட்டும். இடைக்காலம் தொட்டு ஒரு சில சமூகங்களின் இன்றும் நடைமுறையில் இப்பிற்போக்குத்தனம் இருந்து வருகிறது. கவலை நாவலில் அழகிய நாயகியம்மாள் இதைக்காட்டியிருப்பது அன்றைய நடைமுறையில் இருந்து வந்த வழமையாகும்.

**பழமை நம்பிக்கைகள்**

பெண்களின் உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல் பழமை நம்பிக்கைகளாலும் கட்டமைக்கப்பட்ட மரபுகளாலும் அவர்களை வீட்டுக்குள் முடக்கப்படும் அவல நிகழ்வு மூன்று நாவல்களிம் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் வாழ்க்கையில் விளையாடும் ‘பழமை வாதிகளின்’ உண்மையான முகம் இந்நாவல்களில் வெளிக்காட்டப்படுகிறது. சமூகத்தில் தங்களுடைய போலியான கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும் இழுக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக இவர்கள் செய்யும் பிற்போக்குத்தனமான காரியங்கள் பெண்களின் மீது பேராதிக்கம் செலுத்துகின்றது.

புத்தம் வீடு நாவலில் தங்கராஜ் - லிஸி இருவரும் காதலிக்கின்றனர். இருவருமே ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள். பொருளாதார நிலையில் சற்றுத் தளர்வடைந்த நிலையிலும் பழம்பெருமைக்காகவும், போலியான கௌரவத்திற்காகவும் வாழ்ந்து கொண்டிருந்த புத்தம் வீட்டைச் சார்ந்தவர்கள் இவர்களது காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஏற்படும் குழப்பங்களினாலும், சலசலப்புகளினாலும் லிஸியின் கனவு தகர்ந்து விடுகிறது. சமூக மரபுகளிலும், கட்டுப்பாடுகளிலும் சிக்குண்ட ஒரு பெண்ணின் மன உணர்வுகளை மிக அழகாக இந்நாவல் காட்சிப்படுத்துகிறது. சமூக ஒழுக்கம் என்ற பெயரால் பெண்களின் உணர்வுகளையும் அவர்களது வாழ்க்கை சார்ந்த சுதந்திர சிந்தனைகளையும் நசுக்கும் ஆணாதிக்கத்தை எதிர்க்கத் துணிவில்லாத பெண்களுக்கு இந்நாவலின் ‘லிஸி’ ஓர் உதாரணமாகும்.

“லிஸிக்குத் தன் வாழ்வு என்று தான் விடியப் போகிறதோ? என்ற கவலை ஒரு புறமிக்க, ஒருநாள் விடியத்தான் விடியும் என்ற நம்பிக்கையும் இல்லாமல்

போகவில்லை. இந்த ஆறேழு வருஷங்களில், அவள் கல்யாணப் பேச்சு அடிபடும் போதெல்லாம் பின் வீட்டுத் தங்கராஜின் நினைவு அவள் மனத்தில் தோன்றாமல் போவதில்லை. 'மாப்பிள்ளை அப்படி இருப்பாரோ? அல்லது, தன் வீட்டு ஆண்களைப் போலவே தன் அப்பாவை, சித்தப்பாவைப் போல -' இப்படி எண்ணும் போது அவள் உடல் நடுங்கும்'' (புத்தம் வீடு, ப.99).

லிஸியின் விருப்பு வெறுப்புகளை வீட்டில் வெளிப்படுத்த இயலாத நிலையையே நாவலின் இப்பகுதி காட்டுகின்றது. தனது அந்தஸ்திற்கு ஏற்றாற்போன்ற மாப்பிள்ளையைத் தேடும் புத்தம் வீட்டுக்காரர்களுக்கு அவள் மனதின் அழுகை புரிந்து கொள்ளப்படாமலே உள்ளது. இதைப்போலவே குமரி மாவட்டத்தின் ஒரு சிற்றூரின் வரலாறு தொடங்கி, அக்கால நிலவுடமைச் சமூகத்தின் வரலாறாக விரியும் 'கவலை' நாவலிலும் 'பழமை விரும்பிகளால்' பெண்களுக்கெதிரான வன்முறைகள் காட்டப்பட்டுள்ளன. பழமை நம்பிக்கைகளும், கல்வி அறிவின்மையும் பெண்கள்பால் திணிக்கப்பட்ட போலித்தனமான ஒழுக்கநெறிகளும் அதனைத் தூண்டச் செய்து விடுகின்றன.

''இந்த வீட்டுலயா பொண்ணெடுக்கிறது? அந்தப் பொம்பளய பாத்தாலே தண்ணி குடிக்க மனமில்லை. தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை என்பது உங்களுக்குத் தெரியாதோ? தள்ளயப் போலதான் புள்ளயும் இருக்கும். கரும்பிசாசு போல இருக்கா. வாண்டாம் போவோம்'' (கவலை, ப.77). என்ற மாவிளை நாடான் - பொன்னையா உரையாடல் அன்றைய சமூகக் கட்டமைப்பினைக் காட்டுகிறது. நிலவுடைமைத்தனமும் பழமை நம்பிக்கைகளும் பெண்களுக்கெதிரான புள்ளியில் கைகோர்க்கும் நிலையினை இந்நாவல் அழகாகப் பதிவு செய்கிறது. ஆனாலும் இதனை நுண்மையான பகடி மூலம் எளிதாக வெளிப்படுத்திக் காட்டுவதில் அழகிய நாயகியம்மாள் தனித்துத் தெரிகிறார். ''சூரிய பகவானும் இந்தப் பெண்ணை இவர் எடுப்பது சரியில்லை என்று கோபம் கொண்டவன் போல மறைந்தான். முகம் தெரியாத இருள் பரவியது'' (கவலை, ப.78). மணப்பெண்ணை விசாரித்துச் செல்ல வேண்டிய இடத்தில், அவளின் தாயைக் கொண்டே மணமகளின் உருவத்தினை முன் அனுமானம் செய்யும் ஆண்களின் பழமை நம்பிக்கையினை இப்பகடியினால் அழகிய நாயகியம்மாள் உணர்த்துகிறார். மரபு சார்ந்த குடும்ப அமைப்பில் பெண்கள் மீது தாம் விரும்பும் அடக்கு முறைகளைச் சமூக அங்கீகாரத்துடன் கௌரவமான முறையில் ஆண்கள் செய்கின்ற ஏமாற்று வித்தையைப் பொதுவெளிக்கு அடையாளப்படுத்துவதில் அழகிய நாயகியம்மாள் முன்நிற்கிறார்.

**கட்டமைக்கப்பட்ட சமூக ஒழுங்குகள்**

'நாவல் ஊடகத்தில்தான் பெண்களின் கதையைப் பெண்களே சொல்லக்கூடிய வாய்ப்பு பெருவாரியாக இந்த ஆண் மேலாண்மைச் சமூகத்தில் கிடைத்துள்ளது' என்கிறார் க. பஞ்சாங்கம் (2002:258) கவலை, புத்தம் வீடு, தூப்புக்காரி ஆகிய மூன்று நாவல்களிலுமே ஆணாதிக்கச் சமூகத்தினை எதிர்க்கத் துணிவில்லாத

*பெண்களின் குரல்களும் கேட்கின்றன. குறிப்பாகக் குடும்பம் எனும் சமூக அமைப்பிற்குள்ளிருந்தும் பண்பாட்டு வெளிகளிலிருந்தும் பெண்களுக்கெதிராக வெளிப்படும் கலகச் செயல்பாடுகளை இந்நாவல்கள் சரியாகவே அடையாளப்படுத்தியிருக்கின்றன. வழிவழியாக உருவாக்கப்பட்ட சமுதாயச் சட்டத்திட்டங்களுக்கும் போலியான சமூக மதிப்பீடுகளுக்கும் தன்னைச் சரியென ஒப்புக் கொண்டு அவற்றைக் கடைபிடித்து வாழ்கின்ற வாழ்க்கையே பெண்களுக்கு விதிக்கப்பட்டிருப்பதைக் 'கவலை' நாவல் பின்வரும் வரிகளில் குறிப்பிடுகிறது.*

*'அந்தக் காலத்திலிருந்து இந்தச் சுதந்திர காலம் வருவதற்கு முன்னாலே, இந்த நாடான்மார் ஜாதியில் தாலி அறுத்தால் திருப்பிக் கெட்டுகிற பழக்கமே கிடையாது. அந்தப் பெண்களும் கற்புநெறி தவறியதில்லை. சிற்சில இடங்களில் வகை மோசமாய் தவறு வந்துவிட்டால், அந்தப் பெண்ணை வெட்டிச் சுட்டுவிடுவார்கள். சிலர் நடை விளக்கெரித்துக் கொல்லுவார்களாம். சிலர் நாடு கடத்திவிடுவார்கள்'' (கவலை, ப.204).*

*அழகிய நாயகியம்மாள் குறிப்பிடும் இக்கலகச் செயல்பாடுகள் அதிர்ச்சியூட்டுபவை. ஆண் மையச்சமூகத்தில் பெண் தன் இருப்பைத் தொலைக்கும் நிலையினை மிகத்தெளிவாக வெளிப்படுத்துபவை. பெண்களுக்கு மறுமணம் என்பது மிகச் சமீப காலம் வரையிலும் குமரி மாவட்டத்தில் ஒரு சமூகக் குற்றமாகவே கருதப்பட்டது. இம்மூன்று நாவல்களிலும் இடம்பெறும் நாடார் சமூகத்தினர் பெண்களுக்கு மறுமணம் என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவே இருந்திருக்கின்றனர். பெண்களின் உணர்வுகளுக்கு இடம் கொடுக்காது, சமூக நிர்பந்தங்கள் மூலம் அவர்களுக்கு 'விலங்கு' பூட்டுவதிலேயே குறியாக இருந்த நிலையை மூன்று நாவல்களுமே வெளிப்படுத்தியுள்ளன.*

*''லிஸிக்கு வயது பதினான்கு ஆகிறது. 'பெரியபிள்ளை ஆகிவிட்டாள். ஒற்றைத் தாவணி அணிந்து விட்டாள். ஆகையால் இற்செறிப்பு மிகவும் அவசியமாகிவிட்டது'' (புத்தம் வீடு, ப.35) என்ற வரிகளை எல்லாம் நாம் எளிதாகக் கடந்து போக முடியாதபடியே நாவலில் சொல்லப்பட்டுள்ளன. இவையாவும் சமூக ஒழுக்கம் என்ற பெயரால் பெண்களை ஒடுக்கவும் அவர்களின் உணர்வுகளை மழுங்கடிக்கவும், சுதந்திரச் சிந்தனைகளை நசுக்கவும் செய்கின்ற ஆணாதிக்கச் செயல்பாடுகளின் வெளிப்பாடுகளாகவே உள்ளன. இம்மூன்று கதைகளின் நாயகிகளும் ஆணாதிக்கத்தை எதிர்க்கத் திராணியற்றவர்களாகவும் சமூக மரபுகளினாலும் கட்டுப்பாடுகளினாலும் ஊறித் திளைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.*

*அதுவே அவர்களின் வாழ்க்கையைச் சிக்கல்களுக்குள்ளாக்குகிறது. தந்தைவழிச் சமூகம் தன் மீது சுமத்தியுள்ள அடையாளங்களையும், அதிகாரங்களையும் விலக்க வழிதெரியாமல் வாழ்கின்ற அவல நிலையின் துயரங்களை இந்நாவல்கள் வெளிக்காட்டுகின்றன. கட்டமைக்கப்பட்ட போலியான சமூக ஒழுங்குகளினால் பெண் மனமும் உடலும் இரண்டாம் பட்சமாகவே சமூகத்தால் கருதப்படுகின்றன. பெண் உலகம்*

*தன்னைச் சுற்றி மட்டும்தான் நிகழும் என்பது இவ்வொழுங்கின் மையமாக உள்ளது. இதற்கெதிரான கிளர்ச்சிகள் நாவல்களில் வெளிப்படவே இல்லை.*

**போராட்ட வாழ்க்கை**

*குமரி மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு பெண்களின் 'இருப்பினைப் பேசுகின்ற இம்மூன்று நாவல்களிலுமே அவர்களின் சமூகப் போராட்டமே மையமாக இருந்திருக்கின்றது. மூன்று கதை நாயகிகளுக்கும் அவர்கள் பிறந்து வளர்ந்த இடம், மொழி குறித்தெல்லாம் எந்தப் பிணக்கும் இல்லை. ஆனால் சமூகத்தோடு பெரும் முரண்கள் அவர்களுக்கு இருந்தது. அதையெல்லாம் இவர்களைத் தவிர வேறெந்த பெண் எழுத்தாளர்களும் பதிவு செய்யவில்லை. நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மூன்று கதை நாயகிகளும் தங்கள் வாழ்க்கை சார்ந்த சுய முடிவுகள் எடுப்பதற்கும் வெளிக்காற்றைச் சுவாசிப்பதற்கும், விரும்பியவனை மணமுடிப்பதற்கும் எந்த அளவுக்கு போராட வேண்டியுள்ளது என்பதை அனுபவங்கள் வழி இந்நாவல்கள் வழியாகப் பேசுகின்றனர். தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்கள் பெரும்பாலும் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளைத்தான் இந்நாவல்களும் பேசுகின்றன என்றாலும் கதை ஓட்டத்திலும், நடையிலும் நம்பகத்தன்மையிலும் இந்நாவல்கள் தனித்துவமுடையன. இதன் வழியே வெளிப்படும் சூட்சுமமான உணர்வுகள் நாவல்களை கவனங்கொள்ள வைக்கின்றன.*

*அழகிய நாயகி, லிஸி, பூவரசி ஆகிய கதை நாயகிகள் மூவருமே தங்களுடைய உரிமைகளுக்காகப் போராட்டமோ, புரட்சியோ செய்யாத மனப்போராளிகள். தங்களுக்குள்ளே மனப்புழக்கம் கொள்வதோடு சரி, உரிமை மீறல்களுக்கும், இழைக்கப்படும் அநீதிகளுக்கும் எதிராகக் குரலெழுப்பத் தெரியாத அபலைகளாகவே நாவல்களில் வந்து போகின்றனர். இவர்களைப் போலவே பெரும்பாலான பெண்களும் நாவல்களில் சொல்லப்பட்டுள்ளனர். குடும்ப ஆண்களின் சில்லறைப் புத்திகளுக்கும் சமூக மரபு என்ற போர்வையில் நிகழ்த்தும் வன்முறைகளுக்கும் வேறு வழி தெரியாமல் தன்னை ஒப்புக் கொடுத்துக் கொள்பவர்களாகவே உள்ளனர். பிறப்பு - வளர்ப்பு - கல்வி - திருமணம் - காதல் வாழ்க்கை - பிள்ளைப்பேறு முதலான காலகட்டங்களில் குடும்பம் சமூகம் அதனைச் சார்ந்து தாங்கள் அடையும் வலிகளைக் கழிவிறக்கமாகவே நாவல்களில் சொல்லப்படுகின்றன.*

*"'ஏய்யா சீலக்காரன் போறான் கூப்பிடுங்கய்யா' என்றால், இஞ்ச இப்பொ பணம் ஆருகிட்ட இருக்கு, போகட்டும், வாண்டாம்" என்பார்.*

*நாங்க, எங்ககிட்ட பணமிருக்குண்ணு சொன்னா தனக்கு வாங்கிக்கிடுவாரென்று பயந்து பேசாம நிற்போம். பெரியம்மா, மெள்ள எழுந்திருந்து, 'யே சீலயக் கொண்டா' என்று சொல்வதற்குள், இவரும் வந்து விடுவார்.*

*பிச்சக்கார கூதியுள்ளய, ஒரு ஆத்திரத்துக்கு நாலு சக்கரங் கேட்டா இல்லை, இல்லண்ணிருவு கூட்டி வச்சி சீலை எடுக்கப் படிச்சிருக்கு என்பார் (கவலை, ப.162).*

அழகிய நாயகியம்மாள் தன் வரலாறாக விரிக்கும் இப்பத்தியை வாசிக்கையில் வாசக மனம் துணுக்குறும். அன்றைய காலகட்டத்தில் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் பெண்கள் பணம் சேர்க்கப் படாதபாடுபடும் நிலையை அவர் விவரிக்கிறார். இக்கடினமான வேலைகளில் அவர்களுக்குச் சமரசம் செய்ய எந்த ஆண்களும் இருப்பதில்லை. ஆனாலும் 'புதிய சீலை' என்ற எளிய சந்தோஷம் கூட அவர்களுக்கு வாய்ப்பதில்லை. குடும்ப வாழ்க்கையில் எல்லாவித உறவுகளாலும் மிகச் சாதாரணமாக அனுபவிக்கப்படும் கொடுமைகளை இவ்வாறாகப் பல இடங்களில் காணமுடிகிறது. சற்றும் மாறாமல் புத்தம் வீட்டிலும் இது நிகழ்கிறது. இங்கும் லிஸிக்கும் புத்தம் வீட்டில் வாழ்க்கை போராட்டமாகவே கழிகிறது.

"பெண் கேட்கிறவர்கள், பெண் என்ன சொல்லுகிறாள் என்று கேட்கப் போவதில்லை என்று பெண் சொல்வதற்கு என்ன இருக்கிறது? வழக்கம் அப்படிதான்" (புத்தம் வீடு, ப.102).

என்ற வரிகளில் வெளிப்படுவது ஆணாதிக்கத்தின் உச்சம். குடும்பச்சூழலிலும் சரி சமூக வழமைகளிலும் சரி அன்றைய பெண்களுக்கு மணமகனைத் தெரிவு செய்ய உரிமையில்லை. இந்த நிலையில் லிஸிக்குத் தங்கராஜ் மீது கொண்ட காதல் மௌனமாகவே கழிகிறது. இதன்மூலம் லிஸி கொள்ளும் மனப்போராட்டம் வலி நிறைந்தது.

"மூட்டையாக அவள் கட்டிக்கொண்ட அழுக்குத்துணிகள் அவளின் தலையில் இருந்தது. ஒவ்வொரு நிமிசமும் வாழ்க்கைக்கான போராட்டத்துல இருந்தாலும் சிரிக்க மறக்காத சென்மங்க இதுகதான். மனசு நெறய வருத்தம் இருந்தாலும் கொஞ்சம்கூட சோர்வு இல்லாம உழைக்கும் எங்கள பாராட்டுறது யாரு? இந்த சமூகம், மனுசன் என்ற மதிப்ப எங்களுக்கு தருதா...?" (தூப்புக்காரி, ப.81).

என்ற தூப்புக்காரியான பூவரசியின் வார்த்தைகளும் பெண்களின் சமூகப் போராட்டத்தையே பேசுகின்றது.

"வலி, அவமானம்னு வாழ்க்கை முழுக்க நிராகரிப்பையே சுமந்துக்கிட்டே வாழ்ந்தவங்க நாங்க, அரவணைப்புக்காகவும், பாசத்துக்காகவும் ஏங்கி ஏங்கித் தவிச்ச மலர்வதி நான். மனவலிதான் என்னை எழுதத் தூண்டியது" (குங்குமம் சிறப்பிதழ், 18 மார்ச் 2013) என்று கூறும் மலர்வதியின் கூற்று பெண்களின் பாடுகளையும் அவர்களின் சமூகப் போராட்டம் கொண்ட வாழ்க்கைச் சிக்கல்களையும் உணர்த்துகின்றது.

**முடிவுரை**

பெண் வலியையும் துயரையும் வட்டாரம் சார்ந்து எழுதும் பெண் படைப்பாளிகள் மிகமிகக் குறைவு. அதிலும் குமரி எனும் நிலப்பரப்பிற்குள்ளாக அந்நிலம் சார்ந்த மொழியும் அம்மக்களின் வாழ்க்கையையும் தாங்கி புனைவுகள் எழுதிய பெண்படைப்பாளிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். இதில் அழகிய நாயகியம்மாள், ஹெப்சிபா ஜேசுதாசன், மலர்வதி ஆகிய மூவரும் குறிப்பிட்டுச் சொல்லப்பட

வேண்டியவர்கள். இவர்கள் எழுதிய கவலை, புத்தம் வீடு, தூப்புக்காரி ஆகிய மூன்று நாவல்களுமே பெண்களின் வலி நிறைந்த வாழ்க்கையையும் துயரையும் வெவ்வேறு தளங்களில் ஒரே விதமாகக் கூறுபவை. மூன்று நாவல்களிலும் புறக்கணிக்கப்பட்ட வாழ்வு வாழும் பெண்களே மையப்பத்திரங்களாக உள்ளனர். அவர்கள் வாழ்வில் ஏமாற்றம், வலி, குரூரம், வன்மம் நிறைந்ததாக உள்ளது. இதனை அலங்கார ஜோடனை வார்த்தைகளினால் மேற்பூச்சு செய்யாமல் எளிய வார்த்தைகளினால் முழுக்க முழுக்க யதார்த்தவாதச் சாயலினால் நாவல்கள் வெளிப்படுத்துகின்றன. விதவிதமான போர்வைகளினால் குடும்பத்தளத்திலும் சமூகத்திலும் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தும் அநீதிகளும், தீமைகளும், புறங்கணிப்புகளும் அவர்களின் உணர்வுகளை, மனவெழுச்சிகளை மழுங்கடித்து விடுகின்றன. இதையே இம்மூன்று நாவல்களும் வெளிப்படுத்தியுள்ளன.

**கட்டுரைக்கு உதவிய நூல்கள்**


1. அழகிய நாயகியம்மாள், 2021, கவலை, அடையாளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம், 621310.
2. ஹெப்ஸிபா ஜேசுதாசன், 2009, புத்தம் வீடு, சுதர்சன் புக்ஸ், நாகர்கோவில், 629001.
3. மலர்வதி, 2011, தூப்புக்காரி, மதிவெளியீடு, வெள்ளிகோடு, முளகுமூடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.
4. ஜோசப் சொர்ணராஜ், 2018, குமரி வட்டார நாவல்களில் பின்புலம், காவ்யா, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை, 24.
5. பஞ்சாங்கம், க., 2002, தொடரும் ஒளித்திரள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தி.நகர், சென்னை -17.